# முகவுரை

# முகவுரை

## 0. 1 ஆய்வுப்பொருள்

அரிய பெரிய தத்துவங்களை உணர்த்தும் கந்தபுராணம் என்னும் செந்தமிழ்நூல், அடல்கெட முனிந்த செவ்வேற் கந்தவேளின் திருக்கதையாகும். திருமுருகனின் திரு அவதாரத்தையும், வீர தீரச் செயல்களையும், சூரனை வதம் செய்த நிகழ்ச்சியையும், தெய்வயானை வள்ளியம்மை தேவிகளைத் திருமணம் செய்த நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியது. இவற்றைச் செம்மைநெறியில், செறிவா்ந்த நடையில், சொல்லழகுப் பெட்டகமாய் நமக்களித்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார்.

" எப்போதும் திருமேனி தீண்டு வாராகிய அடிகளால் , குமரகோட்டத்து இறைவன் உடங்கியைந்து, ஊக்க அருளிச் செய்யப்பெற்றது. இப்புராணம் காப்பியம் என்னும் பெருமையைப் பெற்றமைக்குக் காரணமாக அமைந்தன, அதன் காப்பிய இலக்கணப் பண்புகள், அவை படிப்போரை ஈர்த்து இன்பம் பயப்பன. அவ்வகையில் கந்தபுராணத்தின் இலக்கியக் கூறுகளை ஆராய்வதின் ஒரு படியாக கந்தபுராணம் ஒரு திறனாய்வு என்னும் தலைப்பில் ஆய்வுப்பொருளை இங்குத் தருகிறேன்.

## 0. 2 கருதுகோள்

ஏறத்தாழ விஜயநகர நாயக்கர் காலத்தில் தமிழில் தலபுராணங்கள் பல தோன்றின. இஸ்லாமியப் படையெடுப்பினால் கோயில்கள் பல அழியும் நிலை தோன்றியதால், கோயில்களின்

பெருமையை எடுத்துக் கூறி, கோயில்களுக்கு ஆதரவாக மக்களைத் திரட்ட வேண்டிய தேவை நிலவியது. இறைவனடியார்களின் வரம்பு கடந்த கற்பனையில் தலபுராணக்கதைகள் தோன்றின. பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் முதலியன சிவபெருமானின் அற்புதச் செயல்களை பரவலாகக் கூறுவன. புராணங்களைக் காலமுறையில் வைத்து நோக்கும்போது, தமிழ்ச் சைவர்கள் எத்தகைய கதைகளை நாடிச்சென்றனர் என்பது புலப்படும். எனவே விஜய நகர நாயக்கர் காலத்திலே தலபுராணங்களுக்கான தேவை ஏற்பட்டபோது, கதைப் பொருளுக்காக, பிரமன், இந்திரன், திருமால் முதலியோர் பொருட்டாக சிவன் நிகழ்த்திய அருட் செயல்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில், சிவனது அருட்செயல்களில் ஒன்றாகிய முருகன் திருவவதாரத்தையும், வீரச்செயல்களையும் விளக்கும் கந்தபுராணம் தோன்றியது. கந்த புராணம் தமிழ்க்காப்பிய நெறிகளுக்கேற்ப மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பல்வேறு இலக்கிய நயங்களும், கருத்துக்கள் நிறைந்த உள்ளுறைப் பொருட்களையும் கொண்டு விளங்குகின்றது. இப்புராணத்தின் சிறப்புகள் அனைத்தையும் ஓர் ஆய்வேட்டினுள் அடக்க இயலாது. எனினும் காப்பிய நெறிகளின் பார்வையில் ஆராய்ந்து பார்க்க முற்பட்டு, கந்த புராணம் ஓர் திறனாய்வு என்னும் தலைப்பு இங்கு ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

## 0. 3 பொருளுரையின் வரையறை

இவ்வாய்வேட்டில், கந்தபுராணத்தின் காப்பியக் கூறுகள், இது ஸ்காந்தபுராணம் என்ற முதனூலிலிருந்து வந்த வழிநூல், கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்கள், சமுதாயப் பழக்க வழக்கங்கள், அணிநயங்கள், இப்புராணத்தில் இடம்

பெற்றுள்ள ஆள் பெயர்கள், அவை வரும் இடங்கள், காப்பியத்தின் பெருமைக்குரிய உயிர்நிலைப் பாத்திரங்களான முருகன், சிவபெருமான், பார்வதி, வீரவாகுத்தேவர், எதிர்நிலைப் பாத்திரங்களான சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரது பண்புகள் ஆகியன பொருளுரையின் வரையறையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## 0. 4 ஆய்வு நெறிமுறைகள்

ஆய்வு நெறி முறைகளான வரலாற்று ஆய்வுமுறை, ஒப்பீட்டு முறை, பகுப்பாய்வு முறை, விளக்கமுறை ஆகியவை இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

## 0.5 ஆய்வின் பாகுபாடு

முதல் இயலில், கந்தபுராணம் புராணவகைகளுள் ஒன்றானதால், புராணம் பற்றிய விளக்கங்களுடன், கந்தபுராணம் இயற்றிய ஆசிரியரின் காலம், இப்புராணத்தின் சிறப்புகள், அமைப்பு முறை ஆகியன கூறப்படுகின்றன.

இரண்டாவது இயலில் கந்தபுராணம் ஒரு வழிநூல் என்பதற்கான இலக்கணக் கருத்துக்களுடன் ஸ்காந்த புராணம் என்ற முதனூலிலிருந்து, கந்தபுராணம் என்ற வழிநூலாக அமைக்கப்படும் போது, தொகுத்தல், விரித்தல், மாற்றல், நீக்கல் என்ற நான்கு நெறிகளும் அமைந்த பான்மையும் ஆய்வு செய்யப்படுகிறது.

மூன்றாவது இயலில் கந்த புராணத்தின் காப்பியக்கூறுகள் தண்டியலங்காரம் கூறிய காப்பிய இலக்கண நெறிமுறைகளின் படி அமையும் தன்மை பகுத்து ஆராயப்படுகிறது.

நான்காவது இயலில் தொல்காப்பிய நெறியில் உவமையணியின் தொன்மை, அதன் இலக்கணம், வகைகள், பொதுத்தன்மைகள், காப்பியங்களில் உவமையணிகளின் இடம் ஆகியன பற்றி ஆராயப்பட்டு, விளக்கங்களும் தரப்படுகின்றன.

ஐந்தாவது இயலில் கந்தபுராணத்தில் காணப்படுகின்ற உவமையணிகள் தொல்காப்பியம் மற்றும் தண்டியலங்காரம் குறிப்பிடும் அணிவகைகளுள் உவமையோடு தொடர்புடைய தற்குறிப்பேற்ற அணிகள், இல்பொருள் உவமையணிகள், எடுத்துக்காட்டு உவமையணிகள் மற்றும் சில அணிவகைகள் முறையே வகைப்படுத்தப்பட்டு விளக்கங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

ஆறாவது இயலில், கந்தபுராணத்தில் இடம் பெறும் ஆள்பெயர்களும், அப்பெயர்கள் வரும் இடங்களும் எடுத்துக் கூறப்படுகின்றன.

ஏழாவது இயலில், கந்தபுராணத்தில் பரவலாகக் காணப்படுகின்ற பல அறக்கருத்துக்களும், தத்துவக்கருத்துக்களும், சமுதாயப் பழக்கவழக்கங்களும் வகைப்படுத்தப்பட்டு தரப்படுகின்றன.

எட்டவாது இயலில் காப்பியத்தின் உயிர்நிலைப் பாத்திரங்களான முருகன், சிவபெருமான், பார்வதி, வீரவாகுத்

தேவர் ஆகியோரது பண்புநலன்கள், எதிர்நிலைப் பாத்திரங்களான சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரது பண்புகள் விளக்க முறையில் ஆராயப்படுகின்றன.

முடிவுரையாக, மேற்கூறியவற்றின் தொகுப்புரை வழி தேடிக்கண்டனவை முறையே தரப்படுகின்றன. இந்நூலை ஒட்டி புராண ஆய்வில் செய்யலாகும், சில ஆய்வுத் தலைப்புகள் தரப்படுகின்றன.

## 0. 6 ஆய்வின் முன்னோடிகள்

கந்தபுராணம் ஆய்வு நோக்கில் பெரிய அளவில் ஆராயப்படவில்லையெனினும், இக்காப்பியத்தைச் சிறப்பாகப் படித்து, கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலை, ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் அவர்கள் படைத்துள்ளார்கள். இந்நூல் முக்கியமான கருத்துக்களைத் திரட்டித் தருகிறது. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் வேலும் மயிலும் என்ற நூலில் கந்த புராணத்தின் கதை நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் கந்தன் கருணை என்ற நூலை பக்தியுணர்வோடு இலக்கியச் சுவை ததும்ப அருளியுள்ளார். சு.அ. இராமசாமிப் புலவர் அவர்கள் கந்தபுராண வசனம் என்ற நூலில் கந்தபுராணச் சுருக்கத்தை மிகத் தெளிவாகத் தந்துள்ளார்கள். திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கந்தவேள் கதையமுதம் என்ற நூலை இனிய எளிய உரைநடையில், புராணத்தை அடியொற்றி, இன்றியமையாத இடங்களில் பாடல்களுடன் சுருக்கமும், விளக்கமும் அளித்துள்ளார்கள். திரு . எஸ்.கே.ஸ்வாமி அவர்கள் 'ஸ்ரீ கந்த புராண வசனம்' என்ற நூலில் கதை நிகழ்ச்சிகளைப் புராணத்தின் பாடல்களை அடியொற்றி விளக்கமாக இனிய எளிய உரைநடையில் தந்துள்ளார்.

## 0. 7 ஆய்வின் பயன்கள்

புராண இதிகாசங்களை ஆய்வு செய்வது, பழைய போக்கு எனக் கருதினாலும், ஆய்வுக்கு வேண்டிய பொருள்கள் பல புராணங்களில் உள்ளன என்னும் கருத்தைப் புலப்படுத்தும் முகமாக இது முதற் பயனைத் தருகிறது.

முருகனுடைய அழகையும் பெருமையையும் பராக்கிரமத்தையும், கருணைச் செயல்களையும் விரித்துரைக்கின்ற கந்தபுராணத்தைப், புராணமாகப் படிக்க விரும்பாதவர்கள், தமிழ் இன்பத்துக்காகவே படித்துநலம் பெற இவ்வாய்வு மேலும் வழி காட்டும். பல அருமையான தத்துவங்களையும், பற்பல நீதிகளையும் இப்புராணத்தினின்று அறிந்து கொள்ளலாம். புராணக்கட்டுக் கோப்பிலிருந்து தமிழ் அறக்கருத்துக்கள், தத்துவங்கள் ஆகியன அறிந்து கொள்வதற்கும் இவ்வாய்வு ஒரு தூண்டுகோலாக அமையும் என்று கருதலாம்.